**<u>In the Court of the District Munsif, Eraniel</u>**

**Original Suit No. 34/2008 Date:14.08.2025**

**(CW1)- மாடசாமி**

<u>வாதி தரப்பு **விசாரணை**</u>

**1.** நான் இரணியல் சார்புநீதிமன்றத்தில் கட்டளை நடத்துனராக பணிபுரிகிறேன் என்றால் சரிதான். நீதிமன்ற உத்தரவுப்படி ரோசம்மாள், தனிஸ்லாஸ் ஆகியோர் வீட்டிற்குஅழைப்பாணை சார்பு செய்ய சென்றிருந்தேன் என்றால் சரிதான். எந்த தேதியில் சார்பு செய்ய சென்றேன் என்றால் 30.07.2025 அன்று காலை 10 மணிக்கு தனிஸ்லாஸ் வீட்டிற்கு சென்றேன், 10.30 மணிக்கு ரோசம்மாள் வீட்டிற்கு சென்றேன். நான் விசாரணை செய்ததில் இறந்து விட்டதாக தெரிவித்தார்கள் என்றால் சரிதான், தனிஸ்லாஸ் இறந்து விட்டதாக அவரது மனைவியும் ரோசம்மாள் இறந்து விட்டதாக அவர் மகனும் தெரிவித்தனர்.

**2.**ரோசம்மாள், தனிஸ்லாஸ் ஆகியோரது இறப்பு சான்றிதழின் நகலை அழைப்பாணையுடன் இணைத்து நீதிமன்றத்தில் ஒப்படைத்து விட்டேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் ரோசம்மாளுக்கு சார்பு செய்யாமல், நீதிமன்றத்தில் திருப்பி கொடுக்கப்பட்ட அழைப்பாணை மற்றும் ரோசம்மாளின் இறப்பு சான்றிதழின் நகல் என்றால் சரிதான், மேற்படி ஆவணம் நீமசாஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் ஆவணம் தனிஸ்லாஸ்க்கு சார்பு செய்யாமல், நீதிமன்றத்தில் திருப்பி கொடுக்கப்பட்ட அழைப்பாணை மற்றும் தனிஸ்லாஸின் இறப்பு சான்றிதழின் நகல் என்றால் சரிதான், மேற்படி ஆவணம் நீமசாஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

( ஒப்பம் )
மாவட்ட உரிமையியல் நீதிபதி
இரணியல்